# தமிழிசையின் தோற்றமும் அதன் வளர்ச்சி நிலையும்

*திரு.வி.இராகவன்*
விரிவுரையாளர், இசைத்துறை
இராமநாதன் நுண்கலைக்கழகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
மருதனார்மடம், இலங்கை

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI: https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5023

## அறிமுகம்

தமிழிசை என்றாலும் தமிழன் இசை என்றாலும் திராவிடர் இசை என்றாலும் தென்னக இசை என்றாலும் கருநாடக இசை என்றாலும் யாவும் குறிப்பது ஒன்றேயாம். யாவும் விந்திய மலைக்குப் பின்னேயும் இந்தியாவின் தென் கோடியிலும் பிறந்து வளர்ந்து வாழ்ந்துவரும் இசை என்றே பொருள்படும். இவ்வாறு வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படும் தமிழிசையானது தமிழ் மொழியுடன் சேர்ந்த வகையிலும் இயற்கையுடன் ஒன்றித்த வகையிலும் எவ்வாறு தோற்றம் பெற்று உலக இசைகளுக்கெல்லாம் ஆதாரமாய் இருந்து வளர்ச்சிப்படிநிலையினை அடைந்தது என்பது தொடர்பாக இக்கட்டுரை ஆராய்கிறது.

கருநாடக இசை வெறும் வாய்ப்பாட்டு மட்டுமல்ல கருநாடக இசையில் பயன்படும் வாத்தியங்கள் கூட தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் உரியவையாய் இருந்து இன்று பாரதம் முழுதும் மட்டுமல்ல உலக நாடுகள் முழுமைக்கும் பரவியிருக்கின்றன. இவை யாவற்றுக்கும் அடிப்படையாக குழல், யாழ், முழவு எனும் மூன்று வாத்தியங்களே சான்றாக உள்ளன. இவ் வாத்தியங்களில் பல இன்றும் தமிழ் நாட்டில் தான் செம்மையாகவும் துல்லியமாகவும் உருவாக்கமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு உருவாக்கப்பட்ட கருவிகளிலிருந்து வெளிவந்த ஓசைகள் களிப்புட்டுவனவாக இருந்ததால் இந்த ஓசைக்கு நாளடைவில் இசை என்று பெயரிட்டு அழைக்கலாயினர்.

## தமிழ் இசையின் தொன்மை

தமிழ் இசையானது மிகவும் தொன்மையானது என்பதைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் சிலவற்றால் அறியலாம்.

"கி.மு 200 - கி.மு 400 காலத்தில் எழுந்த வால்மீகி இராமாயணத்தில்" சுக்ரீவன் அரண்மனையின் அந்தப்புரத்தில் லட்சுமணன் நுழைந்தபோது உள்ளேயிருந்து மிக இனிமையான வீணை இசையும் மற்றும் பல தந்தி வாத்தியங்களின் இசையும் குற்றமற்ற வாய்ப்பாட்டோடு கலந்து வந்தது" என்று ஓர் காட்சி அமைந்திருப்பதைக் காணலாம்.

**"மேலும் தொல்காப்பியத்திலும்**

**"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவுங் கருவென மொழிப"**

என வரும் சூத்திரத்தில் யாழைப் பற்றியும் பறையைப் பற்றியும் விளக்கங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

"வடமொழியில் முதலில் தோன்றிய நாட்டியசாஸ்திரத்தில் பதினான்காம் அத் தியாயத்தில்

***"தத்ர தாசஷிணாத்யாஸ்தாவத் பஹு நிருத்த கீத வாத்யா:***
***கைசிகிப்ராயா சதுர மதுர லலிதாங்கா பின யாச்ச***
***தசஷிணஸ்ய ஸமுத்ரஸ்ய ததா விந்த்யஸ்ய சாந்த ரெ"***

வடக்கே விந்திய மலையாலும் மற்ற மூன்று திக்குகளிலும் கடலாலும் சூழப்பட்டுள்ள நாட்டில் வாழும் மக்கள் பற்பல நடனங்களிலும் வாத்திய சங்கீதத்திலும் சிறந்து விளங்குகிறார்கள்" என கூறப்பட்டிருக்கிறது.

"அத்துடன் மூன்றாவது சங்ககாலத்தில் தொகுக்கப்பட்ட பரிபாடல்கள் இசைக்கென்றே ஏற்பட்டதாகத் தெரிகின்றது.

இசையின் தோற்றம் மொழியின் தோற்றத்துடன் தொடர்புடையது. மொழியின் தொன்மை இசையின் தொன்மையைக் குறிக்கும் என கருதலாம். அவ்வாறாயின் தமிழ்மொழியின் தொன்மை தமிழிசையின் தொன்மையைக் குறிக்கும். இசையின் தொன்மை எங்ஙனம் அளவிடற்கரியதாய் இருக்கின்றதோ அவ்வண்ணமே தமிழ்மொழியின் தொன்மையும் அளவிடற்கரியதாகவே இருக்கின்றது.

ஒரு நாகரிகம் முதிர்ச்சியடைய வேண்டுமாயின் அதற்கு குறைந்தது மூன்று மடங்கு தாலத்திற்கு முன்னமேயே அது தோன்றி படிப்படியாக வளர்ந்து வந்திருக்க வேண்டும். என வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் அறிவியல் முறை அளவுகோலாக நிருணயித்துள்ளனர். இசைக்கலை சிந்துவெளி நாகரிகத்தில் 10,000 ஆண்டுகளுக்கு முன்னமே முதிர்ந்த நிலையினை எட்டியுள்ளது. எனவே ஆராய்ச்சியாளர்களின் அளவுகோலின்படி அந்த இசை அதற்கும் 30,000 ஆண்டுகளுக்கு முன்னமேயே தோன்றி வளர்ந்து வந்திருக்க வேண்டும். அவ்வாறாயின் தமிழன் கண்ட இசையானது குறைந்தது 40,000 ஆண்டுகளாவது தொன்மையானதென்பது பெறப்படுகின்றது.

தமிழ் இசை என்றாலும் தமிழன் இசை என்றாலும் திராவிடர் இசை என்றாலும் தென்னக இசை என்றாலும் யாவும் ஒன்றே என முதலில் கண்டோம். தமிழ் இசை என்னும் பெயர் ஒரு குறிப்பிட்ட மொழியைச் சார்ந்த இசையையே குறிப்பதாகி விடுமாதலாலும் இந்த இசை வடிவமோ வடமொழி, தெலுங்கு, கன்னடம் போன்ற மற்றைய மொழிகளுக்கும் உரியதாகி விட்டதாலும் அக்காலகட்டத்தில் இந்த இசை முறைமைக்கு வேறொரு பொதுப் பெயர் காணவேண்டிய நிலைமை, தேவை ஏற்பட்டது. எனவே, நாளடைவில் தமிழ், தெலுங்கு, கன்னடம், வடமொழிப் பாடல்கள் அனைத்தும் பாடப்பட்டுவந்த தமிழிசை வடிவத்திற்கு "கருநாடக இசை" என்ற பெயர் புதிதாக முளைத்தது.

இன்றும் கூட மிகப் பழைமையானது என்பதைக் குறிக்க கருநாடகம் என்ற சொல் தமிழ் மக்களிடையே பேச்சு வழக்கில் உள்ளது. தமிழ் நாட்டு இசை மிகப் பழைமையானது என்ற பொருளில் கருநாடக இசை என்று அழைக்கப்பட்டிருக்கலாம்.

### இசை, கருவிகளின் தோற்றம்

உலகெங்கணுமே மனிதப் பண்பாடு முதன்முதலில் முல்லை நிலத்தில்தான்

தோன்றியது என ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். தொடக்க காலத்தில் மக்கள் உயிர் வாழ்வதற்கு பழம், கிழங்கு வகைகளை இயற்கை உணவாகத் தாராளமாய் தந்தது முல்லை நிலமே. இதன் பின்னரே மருத நிலத்திலும் மனிதன் வாழத் தொடங்கினான். எனவே பண்பாட்டுக் குழவிப் பருவத்தில் இசைக்கு அடிப்படையான குழலை முதல் முதலாகக் கண்ட மக்கள் பண்டைத் தமிழகத்தின் மக்களே என பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.

ஆகையால் தான் அந்த முதல் இசைக் கருவியாகிய குழலை முல்லையந் தீங்குழல் என்றார் இளங்கோவடிகள். "செந்தீத் தொட்ட குருந்துளைக் குழலின்" என பெரும்பாணாற்றுப்படையின் 179வது பாடல் கூறுகின்றது. எனவே இயற்கையில் வண்டு துளையிட்டுள்ள மூங்கிலினுள் காற்று புகுந்து எழுப்பிய இசையொலியைக் கேட்ட மனிதன் பின் சிறு மூங்கில் துண்டை அறுத்தெடுத்து தானே அதில் நெருப்புக் கோலால் துளைகளிட்டு அதனுள் வாயால் காற்றை ஊதி செயற்கை முறையில் அத்தகைய இசையொலியை எழுப்பிமகிழ்ந்தான்.

அவ்வாறு கருவிகளின் மூலமாகத் தான் முதல் முதலில் இசையை அறிய முடிந்தது. இப்படியாக மூங்கில் குழலில் படிப்படியாக ஒன்று முதல் ஐந்து துளைகளிட்டு வாயால் காற்றைச் செலுத்தி ஐந்து வகையான இனிய ஒலிகளை எழுப்பக் கற்றுக்கொண்டான். அவையே பண்டைக் காலத்தில் ஐந்திசை எனப்பட்டன.

அவ் ஐந்து இசையொலிகளின் கூட்டு ஒலிப்பு முறையே முதன் முதலில் மனிதனுக்கு இசை உணர்ச்சியோடு இராக உணர்ச்சியையும் தந்தது எனலாம். அத்துடன் மக்களுக்கு மிகுந்த செவியின்பத்தையும் தந்தது. அந்த நிலையில் அது சொல் போன்று விளங்கி "பண்" எனவும் காரணப்பெயர் பெற்றது. ஆரம்பத்தில் உருவான ஐந்து இசை ஒலிகளின் கூட்டு இசை "ஐந்திசைப் பண்" எனப்பட்டது.

இன்றும் தமிழகத்தில் மட்டுமன்றி உலகம் முழுவதிலுமே ஐந்தசைப் பண்கள் தான் செவிக்கு மிக்க இன்பம் பயப்பதாய் உள்ளன. முற் காலத்தில் தமிழிசையில் வழங்கி வந்த ஒருவகை ஐந்திசைப் பண்தான் இன்றைய கருநாடக இசையில் "மோகனம்" எனும் புதிய பெயருடன் காணப்படுகின்றது.

குமரிக் கண்டத்தின் எஞ்சிய பகுதியாகிய இன்றைய மடகஸ்கார் தீவில் ஐந்து துளைக் குழல்கள் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்பதும் அவை பழந்தமிழ் இசைக்கருவியின் முறையிலேயே அமைந்திருக்கின்றன என ஆராய்ச்சியாளர்கள் கூறுவதும் குறிப்பிடத்தக்கதாகும்[1].

மேலும் தமிழ் புலவர் விபுலாநந்த அடிகள் தாம் இயற்றிய இசைத் தமிழ் நூலில் பின்வரும் காட்சியை அழகுற விபரித்து குமரிக் கண்டத்தின் காட்சியை கண்முன்னே நிறுத்துகிறார்". இடுப்பிலே ஒரு மூங்கிற் குழல் செருகப்பட்டிருக்கின்றது. ஒரு கையிலே கோல், மற்றொரு கையிலே வில்வடிவமான ஒரு பொருள். அது ஒரு வில்லன்று, பல விற்கள் சேர்த்துக் கட்டப்பட்டிருப்பதைக் காண்கின்றோம்[2]". எனவே அந்த சீரிய நரம்புக் கருவியாகிய யாழும் மிக தொன்மையான காலத்திலே தோன்றியதாகும். முதலில் தோன்றிய இசைக் கருவி குழலாய் இருப்பினும் பின்னர் தோன்றிய அந்த வில்யாழ் கருவியின் வழியே தான் இசை வளர்ச்சி அடைந்தது என கூறலாம்.

யாழ்க் கருவியின் வடிவமைப்பை சிறுபாணாற்றுப்படை வரிகள் ஓவியம் போல் தீட்டியுள்ளன.

**"பைங்கன் ஊகம் பாம்பு பிடித்தன்ன**
**அம் கோட்டுச் சரிந்த அவிழ்த்துவீங்கு திவவு"**

கருங்குரங்கொன்று பாம்பின் தலையைப் பிடித்த பொழுது அது குரங்கின் கையைச் சுற்றி இறுகவும் நெகிழவும் செய்வது போல் யாழின் திவவுப் பகுதியில் நரம்புக்

கட்டு அமைந்துள்ளது. அதன் பத்தர் துவர் ஊட்டப்பெற்ற தோற் போர்வை கொண்டது. குமிழம் கொம்பால் கோடும் அமைந்திருக்கும். இவ்வாறு யாழின் அமைப்புப் பற்றி அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. ஆ.மேரி மனோகரா, தமிழ் இசையின் தோற்றமும் வளர்ச்சியும், 1979 பக். 81 - 82
2. விபுலானந்த அடிகள், யாழ்நூல், 1974, பக். 31.

யாழில் கட்டப்பட்ட நரம்புகளின் நீளம், திண்மை முதலியவற்றை கொண்டுதான் ஏழிசையின் ஒலியளவு, இடைவெளி முதலியவற்றைக் கணக்கிட்டனர். அதனால் தான் இன்று "சுரங்கள்" என்றழைக்கப்படும் இன்னிசை ஒலிகளுக்கு முற்கால தமிழகத்தில் "நரம்புகள்" என்ற பெயர் வழக்கிலிருந்தது.

### முழவின் தோற்றம்

படிப்படியாக இசை வளர்ச்சியில் முன்னகர்ந்து வந்த மனிதன் அடுத்து முழவு இசைக் கருவியையும் கண்டுபிடித்தான். இவ்வாறு முழவுக் கருவியையும் கண்டுபிடித்தபோது இசை மேலும் வளர்ச்சியடைந்தது. உலரும் தோல் மேல் உராய்ந்த கிளையால் எழுந்த இசை ஒலியே முதன் முதலில் முழவை உருவாக்க வழி கோலியது எனலாம்.

தமிழர் கண்ட இசைக் கருவிகளை திருவள்ளுவரும் ஒரு குறளில் குறிப்பிட்டுள்ளார்.

**"குழலினிதி யாழினி தென்பதம் மக்கள்**
**மழலைச் சொற் கேளாதவர்".**

அதாவது குழந்தைகளின் மழலைச் சொல்லின் இனிமையை விளக்குவதற்கு தமிழகத்தின் இசைக் கருவிகளாகிய குழலையும் யாழையும் உவமைகளாக திருவள்ளுவர் தேர்ந்தெடுத்துள்ளார். அந்தளவுக்கு தமிழகத்தில் இசைக்கருவிகள் பல்லாயிரம் ஆண்டுகளின் முன்பே மக்களுக்கு அறிமுகமாயிருந்தன எனலாம். இதனை அடிப்படையாகக் கொண்டு பின்னர் ஏராளமான முழவிசைக் கருவிகள் இசைக்கு வலுச்சேர்க்கும் வகையில் தோற்றம் பெற்று இன்றும் பாவனையில் இருந்து வருகின்றன.

### தமிழிசையின் தோற்றம்

பண்டைக் காலத்தில் இயற்கை அம்சங்களைப் பார்த்து செயற்கை முறையில் பலவகை இசைக் கருவிகளை செய்து பண்டைத் தமிழகத்தில் இசையை வளர்த்துவந்த தமிழர் அந்த இசை ஒரு நுண்கலையாக வளர்ச்சியுற்று முதிர்ச்சியடைந்ததும் அதை தம் இயற்கைச் சூழலிலும் தம் மொழிவழி காண முடியுமென உணர்ந்து அதை செயலாக்க முற்பட்டனர். அப்போது தான் இசைத் தமிழும் தோன்றியது. பொருளுணர்வுடன் பாடப்பட்ட இசை அளித்த இன்பத்தை தமிழர் துய்க்கத் தொடங்கினர்.

### ஏழிசை

தமிழர் இயற்கை அறிவும் மொழி அறிவும் கொண்டு ஏழு இசை ஒலிகளுக்கும் தமிழில் பெயர்களைச் சூட்டினர். அவை முறையே குரல்,துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப்பட்டன.

**"தாரத் துழையு முழையிற் குரலும்**
**குரலி விளியு மிளியிற் றுத்தமும்**
**துத்தத்து விளரியும் விளரியிற் கைக்கிளையுங்**
**கைக்கிளை யுட்டாரமும் பிறக்கு மென்ன**
**மிக்க நூலோர் விழித்துரைத்தனரே**
**என்றாராகலின்**
**தாரத்துள் உழையும்**
**உழையுள் குரலும்**
**குரலுள் இளியும்**
**இளியுள் துத்தமும்**
**துத்தத்துள் விளரியும்**
**விளரியுள் கைக்கிளையும்"**

என கிளை முறையிற் தோன்றி ஏழிசையும் பிறக்குமாறு கண்டுகொள்க என்று "பஞ்சமரபு எனும் இசை நூல் அவ் ஏழிசைகளின் சிறப்பைப் பற்றி கூறியுள்ளது.[3]

**இசை, எழுத்துத் தொடர்பு**

பண்டைக் காலத்திலிருந்தே தமிழ் எழுத்து முறைமைக்கும் தமிழ் இசை முறைமைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பதை தொல்காப்பியம் நமக்குத் தெரிவிக்கிறது.

**“அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீட்டலும்
உள என மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என் மனார் புலவர்”**

என தொல்காப்பியர் கூறியுள்ளதால் தொல்காப்பியர் காலத்திற்கும் முந்தைய மிகத் தொன்மையான காலத்திலிருந்தே அவ்வாறான தொடர்பிருந்தது என்பது உறுதியாகின்றது.

சிந்துவெளித் திராவிட நாகரிகத்தின் முத்திரைகளில் காணப்படும் தமிழ் எழுத்துக்களை ஆராய்ந்துள்ள மொழி அறிஞர் டாக்கர். இரா. மதிவாணன் அவர்கள் தமிழ் எழுத்துக்கள் பிறக்கும் போதே இசையானது எழுத்து களாகப் பிறந்துள்ளன என்று கருத்துத் தெரிவித்துள்ளார். என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**தமிழிசைக்கான அடிப்படை இசைக் குறியீடுகள்.**

இயற் தமிழில் நீண்டு ஒலிக்கும் நெடில் உயிரெழுத்துகளாகிய ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகியவற்றை ஏழிசைகளுக்கும் குறியீடு களாக தமிழர்கள் முதலில் அமைத்தனர். அதுதான் தமிழிசைக்கான அடிப்படையை ஏற்படுத்தியது. சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரை, மற்றும் திவாகரம் முதலிய நூல்களிலிருந்து இதனை அறியமுடிகிறது.

**“ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ வெனும்
இவ்வே ழெழுத்தும் ஏழிசைக்குரிய”**

என திவாகரம் கூறுகிறது.

**“ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்றேழும்
ஏழிசைக்கெய்தும் அக்க ரங்கள்”**

என பிங்கல நிகண்டு கூறுகிறது.

“இனி இதற் கெழுத்துக்கள் வருமாறும் உணர்த்திற்று. ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என விவை நிர நிறையே கொள்க.”

என பஞ்சமரபு நூலும் கூறுகிறது.[4]

இன்றும் கூட கர்நாடக இசையில் இராக ஆலாபனம் செய்யும் பாடகர்கள் “ஆ” என அகாரமாகவே நீட்டித்து உச்சரிப்பதானது அந்த பழைய முறை உயிரெழுத்து குறியீட்டின் அடிப்படையிலேயே ஆகும். உண்மையில் இன்றைய கருநாடக இசை பண்டைத் தமிழிசை முறையே என்பதற்கு இதுவும் கூட ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

அறிவனார், பஞ்சமரபு மூலமும் உரையும், பதிப்பாசிரியர் வித்துவான் வே.ரா. தெய்வசிகாமணி, 1875, பக். 23,4.அறிவனார், பஞ்சமரபு மூலமும் உரையும், 1975, பக். 25

**பாலைகள்**

பாலை என்பது யாழில் நரம்புகளை அமைத்து வாசித்தற்குரிய இசை முறையாகும். முற்காலத் தமிழகத்தில் இவ்வாறான பாலைகள் நான்கு வகையானவை காணப்பட்டன. அவையாவன ஆயப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப்பாலை, சதுரப்பாலை என்பனவாம்.

**ஆயப்பாலை**

இந்த இசை முறை அந்தக் காலத்தில் பெண்கள் எளிதில் இசை பயில்வதற்காக உருவாக்கப்பட்டது5. ஏழிசைகளுள் ஐ, ஔ ஆகிய இரு உயிரெழுத்துகள் தவிர மற்றைய பத்து எழுத்துகளும் இரு வகைப்பட்டன. அவை தான் இன்றைய கருநாடக இசையில் சுத்த, பிரதி என அழைக்கப்படுகின்றன. இயற்தமிழில் காணப்பட்ட பன்னிரண்டு உயிரெழுத்துகள் இசைக் குறியீடுகளாக ஏற்படுத்தப்பட்டன. அவை பழந்தமிழ் இசையில் பன்னிரு வீடு மற்றும் பன்னிரு நிலம் எனப்பட்டன. அவற்றைத் தான் இன்று கருநாடக இசையில் பன்னிரண்டு சுரத்தானங்கள் என அழைக்கின்றனர். அந்த பன்னிரண்டு நரம்புகளில் பண் அமைத்து இசைப்பதே ஆயப்பாலையாகும்.

**வட்டப்பாலை**

பின்னர் அந்த பன்னிரு வீடுகளிலிருந்து தமிழர் இசை வளர்ந்து 22 அலகுகளை அமைத்துக் கொண்டது. இசை ஒலி நுட்பத் தினை அளந்து கூறுவதால் அதற்கு "அலகு" என பெயரிட்டனர். இன்றைய கருநாடக இசையில் அதைத்தான் "சுருதி" என அழைக்கின்றனர். ஏழு ஸ்வரங்களிலிருந்து 22 அலகுகளைப் பிரித்தெடுப்பது ஓர் வட்டக் கணக்கு முறையாகும். அந்த வட்ட இசை முறையே வட்டப்பாலை என அழைக்கப்படுகின்றது.

**திரிகோணப்பாலை**

திரிகோணப்பாலை என்பது இசையலகுகளை முக்கோணக் கட்டத்துள் அமைத்து பகைமுறை அதாவது மூன்றாமிசை முறையில் கணித்தறிந்து வரும் முறைமையில் இசைத்து நிறுவுவது ஆகும். திரிகோணப்பாலை என்பது ஒரு பண்ணுக்குரிய நரம்புகள் மாத்திரை வேறுபட்டு மூன்று நிரல்களாக ஒலிப்பதாம்.

**சதுரப்பாலை**

சதுரப்பாலை என்பது இசை அலகுகளை நாற் கட்டத்துள் அமைத்து நட்பு முறை அதாவது நான்காம் இசை முறையில் கணித்தறிந்து வரும் முறைமையில் இசைத்து நிறுவுவது ஆகும். சதுரப்பாலை என்பது நான்கு நிரல்களாக ஒத்திசைப்பதாம்.

ஆனால் இந்த பழம்பெரும் நுட்பமான இசை முறைகளை எல்லாம் நாம் இன்று இழந்துவிட்டோம்.

**டாக்டர். ஏ.என். பெருமாள், தமிழர் இசை, 1984, பக் 232**

**தமிழிசையின் வளர்ச்சி**

ஏழிசை அமைப்பு ஏற்பட்டு அலகு முறையும் வளர்ந்த பின் தமிழ் இசை மேன்மேலும் வளர்ச்சி அடைந்து கொண்டே இருந்தது. "உலகின் தொடக்க காலத்தில் முல்லை நிலத்தில் வாழ்ந்த அரசிளங்குமரர் ஆநிரைமேய்ப்போரின்தலைவராய்த்திகழ்ந்த காலத்து செப்பமுற அமைக்கப்பெறாத முதனிலை இசைக்கருவிகளின் துணைகொண்டு முல்லைத் தீம்பாவணியினை இசைத்துப் பாடினார்கள்[6]" என கீழ்த்திசை நாடுகளின் இசையைப்பற்றி ஆராய்ந்த ஒக்ஸ்போட் பல்கலைக்கழக இசைப் பேரறிஞர் டாக்டர். சார்ள்ஸ் புருனி "இசைக்கலையின் பொது வரலாறு" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளது தமிழகத்திற்கே பொருந்துவதாகும்.

**"பாவோ டணைத லிசை யென்றார் பண்ணென்றார்**
**மேவார் பெருந்தனம் எட்டானும் - பாவாய்**
**எடுத்தல் முதலா இருநான்கும் பண்ணிப்**
**படுத்தமையாற் பண்ணென்று பார்"**

என சிலப்பதிகார அரங்கேற்றுகாதை உரையில் பண் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

எனவே பெருந்தானம் எட்டிலும் கிரியைகள் எட்டாலும் பண்ணப்படுவதால் பண் எனப்பட்டது.

பெருந்தானம் எட்டாவன நெஞ்சும், மிடறும், நாக்கும்,மூக்கும், அண்ணாக்கும், உதடும், பல்லும், தலையும் என இவை என்று அடியார்க்கு நல்லார் அரங்கேற்றுகாதை உரையில் கூறியுள்ளர்.

கிரியைகள் எட்டாவன எடுத்தல், படுத்தல், நலிதம், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு ஆகியனவாம்[7].

இடைச்சங்க காலத்திலேயே தமிழ்ப் பண்கள் வளம்பெற்றிருந்தன என்பதற்கு தக்க ஆதாரம் தொல்காப்பியத்தில் உள்ளது. தொல்காப்பியத்தின் செய்யுளில் 173வது நூற்பாவில்

"பாட்டிடைக் கிடந்த பொருனவாகிப் பாட்டின் இயல்பே பண்ணத்தி இயல்பே" என தொல்காப்பியர் கூறியுள்ளார். இங்கு பண்ணத்தி என்பது பண்ணை ஒட்டிப் பாடும் இசைப் பாடலைக் குறிப்பதாகும்.

கடைச்சங்க காலத்தில் பண் என்ற சொல்லைத் திருவள்ளுவரும் ஓரிடத்தில் மிக அழகாக எடுத்தாண்டிருக்கின்றார்.

"பண்ணென்னாம் பாடற்கியைபின்றேல் கண்கெனென்னாம்
கண்ணோட்ட மில்லாத கண்."

குறள் : 573

இந்தக் குறளில் உலகியல் வாழ்க்கைக்கு அடிப்படையான கண்ணோட்டம் என்ற ஒன்றினை அவர் விளக்கியுள்ளார். மக்களுக்கு நன்கு தெரிந்த பண்ணை உவமையாகக் காட்டித் தெரியாத ஒன்றை விளக்க எண்ணியுள்ளார். எனவே இதிலிருந்து வள்ளுவர் வாழ்ந்த சங்க காலத்தில் மக்களுக்கு உவமையாக கூறும் அளவிற்கு பண் அனைவரும் அறிந்த ஒன்றாக இருந்துள்ளது என்பது தெரிகிறது.

## ஐவகை நில அமைப்பும் பண்களும்

நிலங்களை ஐந்து வகைகளாகப் பிரித்து அவற்றின் இயற்கைச் சூழலுக்கு ஏற்ப பண்களையும் பாகுபாடு செய்துவைத்த தமிழரின் பண்பாட்டுச் சிறப்பிற்கு ஈடாக வேறெந்த இனத்தவரின் நாகரிகத்தையும் கூறமுடியாது.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்து நிலங்களுக்குரிய சூழ்நிலை, பருவம், காலம், தட்ப வெப்ப நிலைகளுக்கு ஏற்றவாறு கருவிகள், பண்கள், கூத்து வகைகள் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் ஏராளமாகக் காணப்படுகின்றன.

மலைகளும் மலைவளமும் கொண்ட குறிஞ்சி நிலத்திற்குரிய சிறப்பான பண் குறிஞ்சிப் பண். இந்த குறிஞ்சிப் பண் யாம நேரத்திற்குரியது. இயற்கை வளங்கள் குன்றிய வறண்ட பாலை நிலத்திற்குரிய சிறப்பான பண் பஞ்சுரம் ஆகும். இந்தப் பண் வேனிற் பெரும் பொழுதுக்கும் நண்பகலுக்கும் உரியது. காடும் காடு சார்ந்த பகுதிகளும் புல் வெளிகளும் நிறைந்த முல்லை நிலத்திற்குரிய பண் சாதாரி. இது செவ்வழிப் பண் என்றும் அழைக்கப்படும். இந்தப் பண் கார் காலத்திற்கும் மாலை நேரத்திற்கும் முன்னிரவு நேரத்திற்கும் உரியது. வற்றாத நதிகளின் கரைகளில் அமைந்த வயல்களும் வயல்கள் சூழ்ந்த கிராமங்களும் நிறைந்த மருத நிலத்திற்கு சிறப்பாக உரிய பண் மருதப் பண். இது பெரும் பொழுதாகிய வேனிற் காலத்திற்கும் காலை நேரத்திற்கும் உரியதாகும். கடலும் கடல் சார்ந்த இடமும் கொண்ட நெய்தல் நிலத்திற்குரியபண்செவ்வழிப்பண்ணாகும். நெய்தற்குரிய சிறு பொழுதாகிய ஏற்பாடு இந்தப் பண் பாடுவதற்குரிய பொழுதாகும். இது மாலை நேரப் பண்ணாகும்.

இவ்வாறு பண்களை காலத்திற்கும் பருவங்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்ப மிகச் சிறப்பாக வகைப்படுத்திய தமிழரின் நுண்ணறிவையும் சிறந்த பண்பாட்டையும் எண்ணி எண்ணி நாம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். இசைத் துறையில் காலத்திற்கும் பருவங்களுக்கும் ஏற்ப பண்களைப் பாடும் வழக்கம் தமிழிசையில் முன்பிருந்துள்ளது. பண்களில் வரும் நரம்புகளுக்கேற்ற உணர்வுகளோடு அவற்றைப் பாடும் காலங்களும் பருவங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

தேவார காலத்திலும் கூட பண்களை பகற் பண்கள், இராப்பண்கள், பொதுப்பண்கள் என பகுத்திருந்தனர். தேவாரத்திலிருந்து இப்போது கிடைக்கும் பண்கள்[24]. அவற்றில் புறநீர்மை போன்ற பகற் பண்கள்[12], தக்கராகம் போன்ற இராப்பண்கள்[9]. செவ்வழி போன்ற பொதுப்பண்கள்[3] ஆகும்.

மேற்கூறப்பட்ட பண்கள் பாடுவதற்குரிய நாழிகைக் கணக்குகளும் கூறப்பட்டிருக்கின்றன. ஆறு பருவங்கில் மாசி - பங்குனி மாதங்களில் தீபகமும், சித்திரை - வைகாசியில் மேகநாதமும், ஆனி - ஆடியில் சீராகமும், ஆவணி - புரட்டாசியில் மாளவகௌசிகமும், ஐப்பசி - கார்த்திகையில் பைரவமும், மார்கழி - தையில் இந்தோளமும் பாடப்பட வேண்டும் என்ற முறையும் குறிப்பிடப்பட்டுள்ளது[8].

அவ்வாறெல்லாம் எந்தப் பருவத்தில், எந்த நேரத்தில், எந்தப் பண் இனிக்கும் என்பதைக் கூட தமிழர் அன்றே வகுத்து

வைத்திருந்தனர். இசை மேன்மேலும் வளரவளர முடிவில் தமிழர் பண்களை தாய்ப்பண்கள் என்றும், சேய்ப் பண்கள் என்றும் பிரித்தனர். ஏழு நரம்புகளையும் கொண்ட தொகுதிகளை மட்டும் பண் என்றும் ஆறு நரம்புகளை கொண்ட தொகுதிகளை பண்ணியல் என்றும் ஐந்து நரம்புகளைக் கொண்ட தொகுதிகளை திறம் என்றும் நான்கு நரம்புகளை மட்டும் கொண்ட தொகுதிகளைத் திறத்திறம் என்றும் முற்காலத்தில் பெயரிட்டு அழைத்தனர் என சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையிலிருந்து அறியலாம். இவற்றை இன்றைய கருநாடக இசையில் சம்பூர்ணம், ஷாடவம், ஔடவம், சதுர்த்தம் என வடமொழிப் பெயர்களால் அழைக்கின்றனர்.

இவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்த தொல்காப்பியர் கூறிய பண்பட்ட தமிழ் இசை, இளங்கோவடிகள் விபரித்த சீரிய தமிழ் இசை கி.பி 3ம் நூற்யாண்டு வரையிலும் தமிழகத்தில் மிகவும் உன்னத நிலையில் இருந்தது. அதன்பின் தமிழ்நாட்டில் ஏற்பட்ட மதவாதிகளின் ஆதிக்கம், அந்நியர் படையெடுப்பு, வேற்றுமொழிகளின் ஆதிக்கம் போன்ற இன்னோரன்ன காரணிகளால் தமிழிசையானது தனது வளர்ச்சியினின்றும் தேய்வடைந்தது.

**உசாத்துணை நூற்பட்டியல்**


1. திராவிடர் இசை, ப.தண்டபாணி, 1993
2. தமிழிசை அரங்கக் கருவிகள், தேவகி மனோகரன், 1997
3. பண்ணும் இலயமும், முனைவர் இ.அங்கயற்கண்ணி, 2010
4. கருணாமிர்த சாகரம் (சுருக்க திறனாய்வு உரை), அமுதா பாண்டியன், 2007
5. கருணாமிர்த சாகரம் இராவ் சாகிப் மு.ஆபிரகாதம் பண்டிதர், தஞ்சாவூர், 1917.